# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 142/நகராட்சி/2017**
**நாள் : 07/01/2019**

**திருமதி க சந்திரா,**
**க/பெ. கருப்பையா,**
**6/10 ஏ, கார்குடி, சிறுவந்தி,** – **முறையீட்டு மனுதாரர்**
**தேவகோட்டை தாலுகா,**
**சிவகங்கை மாவட்டம் – 630 408.**

**நகராட்சி ஆணையர்,**
**காரைக்குடி நகராட்சி,**
**சிவகங்கை மாவட்டம்** – **எதிர் மனுதாரர்**

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுக்கா, சிறுவந்தி, கார்குடி, எண்.6/10ஏ என்ற முகவரியில் வசிக்கும் திருமதி க. சந்திரா அவர்களின் 29.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.07.2017 அன்று பெறப்பட்டு 142/2017 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு குறித்து மனுதாரரின் வாக்குமூலம், காரைக்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுக்கா, சிறுவந்தி, கார்குடி, எண்.6/10ஏ என்ற முகவரியில் வசிக்கும் திருமதி க. சந்திரா என்பவர் தமது முறையீட்டு மனுவில், காரைக்குடி நகராட்சி, குறிச்சியேந்தல் பகுதி, நகரளவை வார்டு எண்.3, பிளாக் எண்.14, சர்வே எண்.42 பகுதி பிளாட் (மனை) எண்.135–இல் உள்ள 53014 சதுர அடி பரப்பளவிலான நிலத்தின் உரிமை குறித்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி சொத்திற்கு திருமதி மெய்யம்மை மற்றும் எஸ். முத்து ஆகியோர் பெயருக்கு சொத்துவரி விதித்தது குறித்து, இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டு சொத்துவரியை ரத்து செய்யவும் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து காரைக்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. ஆணையர், தமது 25.07.2017 நாளிட்ட அறிக்கையில் புகார்தாரர்கள் குறிப்பிட்டுள்ள இடமான சிவகங்கை மாவட்டம், காரைக்குடி டவுண் குறிச்சிப்புரவு பிளாட் எண்.135, சர்வே எண்.429 (புதிய சர்வே எண்.1439), பிளாக் எண்.14, சர்வே வார்டு 3, இடமானது காரைக்குடி நாட்டார் ரிசிவர் (1) ஆர். சௌமியநாராயண அய்யங்கார் (2) இலுப்பக்குடி தேவஸ்தானம் டிரஸ்டி என்ற பெயரில் பட்டா உள்ளது என்றும், மேற்படி இடத்திற்கு சுமார் 25 வருடங்களுக்கு முன்பு

காலியிட வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி காலியிடத்திற்கு 1998–1999–இல் 01.10.1998–இல் சொத்துவரி சீராய்வு செய்யப்படுவதற்கு முன்னர் மேற்படி இடத்திற்கு காலியிட வரிவிதிப்பு எண்.4137 என்றும், மேற்படி காலியிட வரி 1998–1999 இரண்டாம் அரையாண்டிலிருந்தே திருமதி மெய்யம்மை, க/பெ சண்முகம் பெயரில் தான் காலியிட வரி விதிப்பு உள்ளது என்று ம்தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி காலியிட வரிவிதிப்பு 01.10.1998–க்கு பின்னர் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டு சொத்து சீராய்வில் வரிவிதிப்பு எண்கள் திருத்தம் செய்யப்பட்டதில் மேற்படி எண்ணிற்கு காலியிட வரிவிதிப்பு எண்.88428 என மாற்றியமைக்கப்பட்டது என்றும் மேற்படி காலியிட வரிவிதிப்பு எண்ணிற்கு காலியிட வரியாக ரூ.16/– என 01.10.1998–இல் இருந்தே நிர்ணயம் செய்யப்பட்ட தொகையையே நடப்பு வரை கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது என்றும், மேற்படி காலியிட வரி 2005–2006 I முதல் 2017–2018 II அரையாண்டு வரை நிலுவை மற்றும் நடப்புத் தொகை ரூ.416/– நிலுவையாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், புகார்தாரர் கூறியது போன்று வழக்கு நடைபெறும் போது மேற்படி இடத்திற்கு புதியதாக தற்போது எவ்வித வரிவிதிப்பும் செய்யப்படவில்லை என்றும், மேலும், புகார்தாரர் கூறும் இடத்திற்கு அன்னார் பெயரில் பட்டா ஏதும் கிடையாது என்றும், பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சி நிர்வாக வசதிக்காகவும் புதியதாக Online–ல் வரியேற்றம் செய்யப்பட்டுள்ளதை மனுதாரர் தவறுதலாக புரிந்து கொண்டு நகராட்சி நிர்வாகம் மீது குற்றம் சாட்டுகிறார் என்றும், தற்போது மனுதாரர் மேற்படி சொத்து தனது பெயரில் உள்ளதற்கான ஆதாரம் ஏதும் நகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை என்றும், மேலும் புகார்தாரர் நகராட்சி மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 13/17 மற்றும் IA No.30/17ல் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், நகராட்சி ஆணையர் அவர்களிடம் 22.08.2017 அன்று மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது வழக்கில் உள்ள நிலம் 1998-99 க்கு முன்பே மெய்யம்மை பெயரில் சொத்து வரி விதிக்கப்பட்டு இருந்தது என்றும், இதுகுறித்து முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (O.S. நெ. 13/2017 I.A.No. 30/2017) நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரர் திருமதி. சந்திரா மற்றும் உரிமை கோரும் திருமதி. மெய்யம்மை இருவரும் வழக்கு தொடர்ந்துள்ளனர் என்றும், அந்த வழக்கு இன்னும் காரைக்குடி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், இதில் நகராட்சி எதிர் மனுதாரராக சேர்க்கப்படவில்லை என்றும், நகராட்சி சொத்து விரி விதிப்பு 1998 - 1999 (அலுவலகத்தில் உள்ள பதிவுகளில்) மெய்யம்மை பெயரில் உள்ளது என்றும், தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி மாநிலம் முழுவதும் சொத்து வரி விதிப்புகள் அதனுடைய பதிவுகள் மையப்படுத்தப்பட்டுள்ளன என்றும், அதில் இருந்து வரக்குடிய சொத்து வரிக்கான கேட்பு அறிவிப்பில் உள்ள எண்ணை தவறாக கருதி மனுதாரர் மனு செய்துள்ளார் என்றும், 1998-99–க்கு முன்பு வரி வதிப்பு எண். 4137 என்றும்,பின்பு 88428 எண்ணாக மாற்றப்பட்டுள்ளது என்றும், தற்போது நகராட்சி எதிர் மனுதாரருக்கு சாதகமாக புதிதாக வரி விதிப்பு செய்துள்ளதாக மனுதாரர் தவறாக புரிந்து கொண்டு மனு செய்துள்ளார் என்றும், எனவே இதில் எந்தவித முறைகேடுகளும் நடக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரிடம் 09.11.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது மனுதாரர், காரைக்குடி நகரட்சி வார்டு 3, பிளாக் எண். 14ல் பிளாட் எண். 135ல் தங்களது 12 செண்ட் நிலத்தில் கால்நடை குத்தகைக்காக வைக்கோல் போர் போடப்பட்டது என்றும், இன்று சாட்சி அளிக்க வந்து இருக்கும் திரு. சுப்பிரமணிக்கு தான் மாதம் ரூபாய் ஐந்து ஆயிரம் வாடகைக்கு கொடுத்துள்ளதாகவும், தனது கணவர் திரு. கருப்பையா பெயரில் நிலம் வாங்கப்பட்டது என்றும், அவர் பெயருக்கு பட்டா உள்ளது என்றும், தனது கணவர் பெயரில் கைரசீது போட்டப்பட்டு இருந்தது என்றும், அவர் காலமான பிறகு தன் பெயரில் சொத்துவரி ரசீது வரவேண்டும் என்றும், அதற்காக நகராட்சியில் மனு கொடுத்து இருந்ததாகவும், ஆனால் தனது கோரிக்கையை ஏற்காமல் திருமதி. மெய்யம்மை பெயருக்கு நகராட்சியில் சொத்து வரி ரசீது போட்டு விட்டார்கள் என்றும், இது சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுக்காததால்,

தன்னால் காரைக்குடி மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு O.S.No. 13/2017 நாள் 31.1.2017 தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது நகராட்சி ஆணையர் திருமதி. மெய்யம்மை பெயருக்கு சொத்துவரி ரசீது போட்டு விட்டார்கள் என்றும், நிலம் தங்கள் பொறுப்பில் தான் இருக்கிறது என்றும், தனது கணவர் திரு. கருப்பையா 11.6.2015 ல் இறந்து விட்டார் என்றும், திரு. மெய்யம்மை பெயரில் இருக்கும் சொத்துவரி ரசீதை ரத்து செய்து தனது பெயருக்கு மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர் அவர்களின் சாட்சியான திரு P.R.சுப்ரமணியன் என்பவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு 09.11.2017 அன்றே விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. திரு சுப்ரமணியன் தமது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பத்து ஆண்டு காலமாக மூன்று ஆயிரம் ரூபாய்க்கு வாடகைக்கு இருந்ததாகவும், தற்போது ஐந்து ஆயிரம் ரூபாய் வாடகை கொடுப்பதாகவும், முதலில் சந்திரா அவருடைய கணவர் திரு கருப்பையா பெயருக்கே ரசீது போட்டார்கள் என்றும், சுமார் 7 மாதங்களுக்கு முன்புதான் திருமதி மெய்யம்மை பெயருக்கு மாற்றினார்கள் என்றும், அந்த ரசீதை ரத்து செய்து மனுதாரர் திருமதி க. சந்திரா பெயருக்கு சொத்துவரி விதிப்பு செய்யுமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் சாட்சிகள் அளித்த வாக்குமூல நகல்களை ஆணையருக்கு அனுப்பிவைத்து மேற்படி காலிமனை சொத்துவரி விதித்ததற்கான பழைய வரிவிதிப்பு எண்.4137 சம்பந்தமான மூல ஆவணங்களுடன் உரிய விளக்கம் அளிக்குமாறு 12.01.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

7. நகராட்சி ஆணையர் தமது 31.01.2018 நாளிட்ட அறிக்கையில் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள இடமானது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி டவுண் குறிச்சிப்புரவு பிளாட் எண்.135, சர்வே எண்.429 பார்ட், புதிய சர்வே எண்.1439/2, பிளாக் எண்.39, சர்வே வார்டு 3, 1. கருப்பணன் மனைவி தெய்வானை,2. கருப்பணன் மகள் ராமாமணி 3. கருப்பணின் மகன் கரு. ரவிக்குமார் 4. கரு. ராஜீ ஆகியோர் பெயர்களிலும், புதிய சர்வே எண்.1439/2, பிளாக் எண்.39, சர்வே வார்டு 3, இடமானது காரைக்குடி நாட்டார் ரிசிவர் (1) ஆர். சௌமியநாராயண அய்யங்கார் (2) இலுப்பக்குடி தேவஸ்தானம் டிரஸ்டி என்ற பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது என்றும், மேலும், மேற்படி இடம் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு காலியிட வரிவிதிப்பு செய்யப்பட்டதாகும் என்றும், மேற்படி காலியிடத்திற்கு 1992–1993–ஆம் ஆண்டு சொத்துவரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டு, மேற்படி சொத்தானது வரி விதிப்பு செய்யப்பட்ட ஆண்டு முதல் இந்நகராட்சி சொத்துவரி கேட்பு பதிவேட்டின்படி திருமதி மெய்யம்மை க/பெ சண்முகம் என்பவர் பெயரில் உள்ளது என்றும், மேற்படி காலியிட வரிவிதிப்பு 01.10.1998–க்கு பின்னர் சொத்துவரி சீராய்வில் வரிவிதிப்பு எண்கள் திருத்தம் செய்யப்பட்டதில் பழைய காலியிட வரிவிதிப்பு எண்.4137–க்கு பதிலாக புதியதாக காலியிட வரிவிதிப்பு எண்.88428 என மாற்றியமைக்கப்பட்டது. மேற்படி காலியிட வரிவிதிப்பு எண்ணிற்கு அரையாண்டு காலியிட வரியாக ரூ.16/– என 01.10.1998 முதல் நிர்ணயம் நடப்பு வரை கேட்பு எழுப்பப்பட்டு 2005–2006 முதல் 2017–2018 II அரையாண்டு வரை நிலுவை மற்றும் நடப்புத் தொகை ரூ.384/– நிலுவையாக உள்ளது என்றும், மேலும், புகாரில் தெரிவிப்பது போன்று வழக்கு நடைபெறும் போது மேற்படி இடத்திற்கு புதியதாக தற்போது எவ்வித வரிவிதிப்பும் செய்யப்படவில்லை என்றும், மேலும், புகாரில் தெரிவிக்கும் இடத்திற்கு திருமதி சந்திரா க/பெ கருப்பையா என்பவரது பெயரில் சொத்துவரி பெயர் மாற்றமோ, அல்லது புதிய சொத்து வரிவிதிப்பு செய்து தர கோரியோ பட்டா நகல், பதிவு பத்திர நகல், வாரிசு சான்று நகல் மற்றும் இறப்பு சான்று நகல் போன்ற ஆவணங்களுடன் இந்நகராட்சிக்கு அன்னாரால் நாளது தேதிவரை விண்ணப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

8. முறையீட்டு மனுதாரர் திருமதி க. சந்திரா அவர்களின் முறையீட்டு மனு, அன்னாரின் வாக்குமூலம், மனுதாரருடைய சாட்சியின் வாக்குமூலம் மற்றும் காரைக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் வாக்குமூலம் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

9. முறையீட்டு மனுதாரர் திருமதி க. சந்திரா மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கு தனது கணவர் பெயரில் உள்ளதற்கான ஆதாரங்களான மனை பட்டா நகல், பத்திர நகல், வாரிசு சான்று நகல், இறப்பு சான்று நகல் போன்ற எதையும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், வரி விதிப்பு செய்வதற்காக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.13/2017 மற்றும் IA No.30/ 2017-ல் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது என்று காரைக்குடி நகராட்சி ஆணையர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)ன் படி நீதிமன்றமொன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால் இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019**– ஆம் ஆண்டு, **ஜனவரி** திங்கள், **7**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 10/1/2019

10/1/19

பெறுநர்

1. திருமதி க சந்திரா,
   க/பெ. கருப்பையா,
   6/10 ஏ சிறுவந்தி, கார்குடி,
   தேவகோட்டை தாலுகா,
   சிவகங்கை மாவட்டம் – 630 408.

2. நகராட்சி ஆணையர்,
   காரைக்குடி நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி